**பஸ்ஸர பிரதேச சபை**

**பதுளை மாவட்டம்**

-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூலை 20 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 24 ஆந் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து பஸ்ஸர பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ஒப்பந்த கடன்கொடுநர் நிலுவை ரூபா 13,109,640 ஆக இருந்த போதிலும் ரூபா 13,274,430 பெறுமதியாக கணக்கில் காட்டப்பட்டுள்ளது. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் | பதில் வழங்கப்படவில்லை. |
| (ii) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய மூலதனப் பெறுகை ரூபா 7,763,146 ஆக இருந்த போதிலும் அதனை ரூபா 6,756,770 ஆக கணக்கில் காட்டப்பட்டுள்ளது. | சரியான முறையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | சரி செய்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டின் நன்கொடைக்காசு மற்றும் உதவி செலவுகள் ரூபா 67,678 ஆக இருந்த போதிலும் நிதி செயற்பாட்டு றிக்கையில் ரூபா 28,833 ஆக் காட்டப்பட்டிருந்தது. | சரியான முறையில் நிதிக்கூற்றுக்க ள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலத்தில் சரி செய்கின்றேன். |

**(ஆ) கணக்காய்வுக்கென சாட்சிகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 105,788,698 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான உறுதிப் பத்திரங்கள், விலை மதிப்பீட்டு அறிக்கை, மற்றும் சொத்துப் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்த தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சபைக்கு சொந்தமான காணிக்கான உறுதிப்பத்திரம் மற்றும் விலை மதிப்பீட்டறிக்கை என்பன காணப்படவில்லை. |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இலக்க 15 பிரதேச சபை சட்டம் 127 பந்தி | சபை எல்லைக்குள் உள்ள 38 சுடலைகள் சம்மந்தமாக உறுதிப் பத்திரம் மற்றும் மாற்றல் கட்டளைகள், அளவீட்டுக் கட்டளைகள் எடுக்கப்படவில்லை. மற்றும் காணிப் பதிவேடும் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | காணிப்பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். | அளவீடு செய்ய மாற்றல் கட்டளைகள் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்வரும் காலத்தில் எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 இலக்க சுற்றுநிருபம் | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் 05 வருடத்திற்கு ஒரு தடவை விலை மதிப்பீடு செய்ய வேண்டிய போதிலும் பஸ்ஸர சந்தையில் உள்ள 20 கடைகள் அதன்படி விலை மதிப்பீடு சபையினால் செய்யப்படவில்லை. | சுற்றுநிருபத்தில் உள்ள அறிவுறுத்தல்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விலை மதிப்பீடு மேற்கொள்வதற்கு விலை மதிப்பீட்டு திணைக்கள அலுவலர்கள் வருகை தராமையால் விலை மதிப்பீட்டு வேலைகள் தாமதமாகியிருந்தது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 31,343,960 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,069,852 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 528,266 | 521,457 | 413,371 | 108,086 | 319,156 | 521,457 | 338,002 | 183,454 |
| (ii) | வாடகைகள் | 57,440,840 | 16,342,203 | 11,411,634 | 4,930,569 | 17,096,000 | 9,370,872 | 9,334,372 | 36,500 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,350,000 | 2,932,974 | 1,528,715 | 1,404,259 | 22,781,800 | 3,183,974 | 1,538,552 | 1,645,422 |
| | மொத்தம் | 60,319,106 | 19,796,634 | 13,353,720 | 6,442,914 | 40,196,956 | 13,076,303 | 11,210,926 | 1,865,376 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான பஸ்ஸர பொதுச் சந்தை கடைகளில் மற்றும் வுநுனேநுசு கடைகளில் அறவிட வேண்டிய ரூபா 488,569 பெறுமதியான வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடை வாடகை அறவீடு செய்யப்பட வேண்டும் | கடை வாடகை அதிகமான தொகையாகையால் அறவிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதில் அறவிடுவதற்கு தொடர்ந்து முயற்சி செய்கின்றோம். கடை வாடகைக்கான சாதாரண தீர்மானம் கொடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு 05 வருடத்திற்கு மேலாக காணப்பட்ட அறவிடப்படாத ரூபா 46,233,837 பெறுமதியான கடன்பட்டோர் மீதி மீளாய்வாண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் நிலுவை அறவிடப்பட வேண்டும். | ஒப்பந்த கடன்பட்டோர் மீதி விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 23,275,156 பெறுமதியான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் கிடைக்க வேண்டிய ரூபா 6,355,657 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | இது சம்மந்தமாக தொடர்பான நிறுவனத்திற்கு அறிவித்தல் கொடுத்துள்ள போதும் இதுவரை நிலுவை வருமானம் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள், பொது வழிகள், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பந்தியின் பிரகாரம் 30 நோக்கம் செய்வதற்கு உபவிதிகள் செய்யப்படவேண்டியிருந்த போதும் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 12 நோக்கங்களுக்காக உபவிதிகள் செய்யப்பட்டது அல்லது உள்ளீர்ப்பு செய்யப்படவில்லை. | உபவிதிகள் செய்யாத காரணத்திற்காக உபவிதிகள் செய்யப்பட வேண்டும். | பதில்கள் வழங்கப்படவில்லை. |

### 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டில் சபைக்கு சொந்தமான பஸ்ஸர பஸ் நிலையத்தில் உள்ள 08 கடைகளிற்கு மாதாந்த வாடகைகள் விலை மதிப்பீட்டு திணைக்களம் ஊடாக 03 வருடத்திற்கு மட்டும் செல்லுபடியாக மதிப்பிடப்பட்டுள்ள போதிலும் இதனை மீள 2019 ஆம் ஆண்டிற்காக விலை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | புதிய விலை மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | விலை மதிப்பீடு செய்வதற்கு விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் சபை எல்லைக்குள் உள்ள 21 அனுமதியற்ற கட்டடங்கள் சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கும்படி அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபைக்கு சொந்தமான 14 காணிகளிற்கான உரிமையை உறுதிப்படுத்த இதுவரைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணி உரிமையை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அளவீடு செய்து கையேற்க நடவடிக்கை தற்போது எடுக்கப்படுகின்றது. காணி அபிவிருத்தி ஆணைக்குழுக்கு சொந்தமான காணி சம்மந்தமாக மேலதிக நடவடிக்கை செய்யமுடியாதுள்ளது. |
| (ஈ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு செலுத்தப்பட வேண்டிய செலவின கடன்கொடுநர் ரூபா 2,330,596 மற்றும் ஒப்பந்த கடன்கொடுநர் ரூபா 13,274,430 தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்பட வேண்டிய கணக்கு மீதி தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலத்தில் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அனுமதிக்கப்பட்ட பதவியணயில் 05 பதவிகளுக்கு 09 அலுவலர்கள் வெற்றிடம் நிரப்பப்படவில்லை. | பதவியினர் வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும். | வெற்றிடம் பற்றி தொடர்பான நிறுவனத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

**3.4 சொத்து முகாமைத்துவம்**

**விளைவற்ற சொத்து**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் 2014, 2015 மற்றும 2016 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 145,198 பெறுமதியான 31 ரயர் மற்றும் ரியூப் பயன்படுத்தப்படாது விளைவற்றிருந்தது. | தேவைகள் இனங்கானப்பட்டு கொள்வனவு செய்யப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் உள்ளக கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு செய்யப்பட வேண்டும். | உள்ளக கணக்காய்வு செய்வதற்கு உள்ளக கணக்காய்வு அலுவலர்கள் வரவில்லை என்பதை தெரிவிக்கின்றேன். |

**4.2 கணக்காய்வு முகாமைத்துவ குழு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும முகாமைத்துவ குழு கூட்டம் 2 மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது. | குறைந்தது ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒன்றுப்படி கணக்காய்வு மற்றும முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் சீர்செய்யப்படும். |